**எம்பிலிபிடிய பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 14 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 385,725 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | ரூபா 252,444 பெறுமதியான 17 பொருட்கள் பராதீனம் செய்வதற்கு முன்னர் ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்த காரணத்தால் நிலையான சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பராதீனம் செய்த பின் ஏடுகளிலிருந்து நீக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணத்திற்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 395,070 ஆன பாவனை பொருட்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குப் பதிவிட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டினுள் ரூபா 185,500 யிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 கணனிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் கொள்வனவு மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஊ) | 07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்று மீதிகள் மற்றும் துணை பதிவேட்டு மீதிகளிற்கிடையில் ரூபா 43,488,253 தொகை வேறுபாடு ஆனது. | மீதிகளை ஒப்பிட்டு சீர் செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் கண்டறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (எ) | ஊழியர் பிணை வைப்பு கணக்கு மற்றும் ஊழியர் பிணை வைப்பு முதலீட்டு கணக்கிற்கிடையில் ரூபா 160,529 ஆன வேறுபாடு நிலவியது. | குறித்த கணக்கு மீதிகள் இடையிலான வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் கண்டறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| | (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1988 முதல் 2014 வரையான காலத்தினுள் 31 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,898,579 ஆன முற்பணம் மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | தீர்க்கப்படாத முற்பண மீதியின் ஒரு பகுதி தீர்க்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 203,857 ஆன காலாவதியான வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காமை | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | நிதிப்பிரமாணங்கள் பிரகாரம் ரூபா 965,937 தொகை 2018 ஆண்டு இறுதி கணக்கிற்கு சீராக்கம் செய்து வைப்பு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2005 ஜூன் 01 ஆம் திகதிய 2005/04 ஆம் இலக்க "சில காணிகளை விற்பதன் மீது வரி அறவிடல்" எனும் சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 02(iv) பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படாமல் 3 காணி ஏலவிற்பனைகளுக்காக அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | எதிர் காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,124,128 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 21,488,345 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,237,764 | 6,838,944 | 5,204,861 | 5,904,263 | 5,245,764 | 6,585,755 | 8,256,303 | 4,292,981 |
| (ii) | வாடகை | 12,062,300 | 11,648,839 | 11,648,839 | - | 9,564,107 | 9,642,798 | 10,252,848 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,477,000 | 1,616,154 | 1,877,354 | 199,400 | 1,191,000 | 2,255,312 | 1,802,712 | 460,600 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,833,300 | 17,986,342 | 27,500,683 | 7,321,600 | 12,575,570 | 20,153,129 | 16,991,974 | 17,148,428 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசம்பர் 31 திகதியன்று ரூபா 909,210 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலம் நிலுவையாக உள்ள 553 அலகுகளிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 635,223 ஆன மீதி நிலவியது. | நிலுவை வீதவரியை அறவிடுட முறையான மற்றும் துரிதமான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் | இம் மீதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் திகதி வரை ரூபா 101,173 தொகை அறவிடப்பட்டுள்ளது. நிலுவை தொகையை அறவிடும் போது வதிவாளர்கள்ளற்ற வெற்று காணி பெறுமளவு நிலவுகின்றமை, உரித்துரிமை அவ்வப்போது மாறுதல், குறித்த உரிமையாளர்களை |

| | | |
|---|---|---|
| | | இனங்காண முடியாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. |

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையிலுள்ள 400 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்திருந்த போதும், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பரிந்துரை வழங்குதல் தாமதம் காரணமாக மீளாய்வாண்டு இறுதி வரை விநியோகிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திர எண்ணிக்கை 150 மாத்திரம் ஆனது. | வியாபார அனுமதிப்பத்திர விநியோகிப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் | சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பரிந்துரையை பெற்றுக்கொள்ள 400 அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் 150 அனுமதிப் பத்திரங்களுக்கு மாத்திரமே பரிந்துரை வழங்கப்படடிருந்தன. |
| (ஆ) | 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சூழல் காப்புறுதி அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளாத கைதொழில்களை இனங்காணுவதற்கு சபையினால் முறையான அமைப்பொன்றை பின்பற்றி இருக்கவில்லை. குறித்த அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 326 நிறுவனங்கள் அவ் அனுமதிபத்திரங்களை பெற்றுக்கொள்ளாததனால் சபை அதிகார எல்லையில் சூழல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்பு பொதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சூழல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் சூழல் அனுமதிபத்திரம் விநியோகிக்க வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.4 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுபை அதிகார எல்லையினுள் காட்ச்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையான விளம்பரப் பலகை களிற்காக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 625,800 தொகை அறவிட வேண்டியதாக நிலவியது. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய எல்லா வருமானங்களையும் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தொகையை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

### 2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 2,240,269 ஆனதுடன், மீளாய்வாண்டிற்கான நிலுவை முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய எல்லா வருமானங்களையும் தாமதமின்றி சேகரித்துக்கொள்ள வேண்டும். | இந்த காலப்பகுதி தொடர்பாக காணி பதிவாளர் அலுவலகத்தினால் தகவல் வழங்கப்படாமையினால் குறிப்பான நிலுவை தொகையொன்றை காட்ட முடியாமல் இருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் ஒன்று சேர்க்கப்படும் கழிவுப் பொருட்களை வேறாக்காமல் முறையற்ற விதத்தில் வாவியொன்றுக்கு அருகில் அமைந்துள்ள அரச வெற்றுக் காணியொன்றிற்கு வெளியிடப்பட்டிக்கொண்டிருந்தன. இதனால் வாவியின் நீர் அசுத்தம் அடைவதாகவும், உக்கலடையாத பொருட்களினால் டெங்கு நோய் பரவும் அபாயம் நிலவுவதாகவும் எம்பிலிபிட்டிய சுகாதார வைத்தியர் அறிக்கையிட்டிருந்தார். அவ்வாராயினும் கழிவுப் பொருள் முகாமைக்காக பொருத்தமான நிலமொன்று இல்லாத காரணத்தால் குறித்த பிரச்சினையை தீர்க்க முடியாமல் இருந்தது. | பொருத்தமான நிலமொன்றை பெற்றுக் கொண்டு முறையான கழிவுப் பொருள் முகாமை வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுப் பொருள் கருத் திட்டமொன்றை ஆரம்பிக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் 5 ஏக்கர் காணி ஒன்றை பெற்றுக் கொளவது தொடர்பாக ஏனைய நிறுவனங்களின் பரிந்துரை பெறப்பட்ட போதும் மத்திய சூழல் அதிகார சபையினால் உரிய பரிந்துரை வழங்கப்படாததன் காரணமாக அக் காணியை உரிதியாக சபைக்கு சுவீகரித்துக் கொள்ள முடியாமல் உள்ளது. அதன் காரணமாக வேறு காணியொன்றை பெற்றுக் கொள்ள இலங்கை மகாவலி அதிகார சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது கழிவுப் பொருட்களை வெளியேற்றும் |

| | | |
|---|---|---|
| | | காணியின் கழிவுப் பொருட்கள் சந்திரிகா குளத்திற்கு செல்வதை தடுக்க மண் குவியல் மதிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நீண்ட கால திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு நடவடிககை மேற்கொள்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டில் மேற் கொள்ளப்பட்டிருந்த புதிய மதிப்பீட்டின் மீது வீத வரி அறவிடல் மீளாய்வாண்டு இறுதி வரையும் செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய சொத்துக்கள் மதிப்பீடு பிரகாரம் வரி அறவிட வேண்டும். | புதிய வீத வரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வரி சதவீதத்திற்கான அங்கீகாரத்தை பெருவதற்கு 2018 திசெம்பர் 26 ஆம் திகதி மாகாண சபைக்கு அனுப்பப்பட்ள்ளது. |

## 3.3 மனித வள முகாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 பதவிகளிற்குரிய நீண்ட காலமாக நிலவிய வரும் 17 வெற்றிடங்களை மீளாய்வாண்டு இறுதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | பதவி வெற்றிடங்ளுக்காக முறையாக அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. மாகாண சபையின் இணக்கப்பாட்டுடன் காவலாலி, நூலக தொழிலாளி, கனரக வாகன இயக்குனர் போன்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 ஆண்டு முதல் நிலுவையாக நிலவிய 12 ஓய்வு பெற்ற அலுவலர்களின் கூட்டுத் தொகை ரூபா 64,173 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர்காலத்தில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவித்து இப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் 03 காணி ஏலவிற்பனைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வரி ரூபா 220,373 குறைவாக அறவிடப்படடிருந்ததுடன், சட்டத்தின் 154(2) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர் காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**சொத்துக்கள் பதியப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான விபரங்கள் உள்ளிட்ட வீதி விளக்கு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி விளக்கு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு முறையாக நடாத்தப்பட வேண்டும். | வீதி விளக்கு பதிவேடொன்று தயாரிக்கப்படுகின்றது. |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 3,530,100 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இவ்வாறான திட்டமொன்றின் பிரகாரம் செயற்படுகிறேன். |

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 பெப்ரவரி 28 ஆம் திகதிய 03/2018 இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் இலக்கம் 02 மற்றும் 04 ஆம் பந்திகளுக்கு முரணாக மாகாண சபையில் மற்றும் பிரதேச சபையில் பதியப்படாத வழங்குனர்களிடமிருந்து 05 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 672,408 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதியப்பட்ட வழங்குனர்களிடமிருந்து குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இல்லாததனால் அவசர தேவை நிமித்தம் இந் நிறுவனங்களிடமிருந்து விலை மனு கோரப்பட்டு சந்தை விலை ஒப்பீட்டு முறை பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

### 3.6.3 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபை அதிகாரி எல்லையில் 07 பாதைகளில் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 330,644 ஆன தொகை மற்றும் ஓர் பாதை அபிவிருத்திற்காக ரூபா 45,356 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த வேலைகள் உரிய மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன், மேலதிகமாக செலுத்திய பணத்தை அறவிட வேண்டும். | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்திலிருந்து கழித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டின் மீது ரூபா 1,918,982 செலவிடப்பட்டு துங்கம பாடசாலை பிரவேச பாதை 264.4 மீட்டர்கள் கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன், அவற்றில் 195 மீட்டர் பிரமான அளவில் மேற்பகுதி சிமேந்து மற்றும் கருங்கல் படை கலன்றிருந்தது. அதன் பிரகாரம், அப் பகுதி அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 1,415,310 தொகை விலைவற்று நிலவின. | உரிய மேற்பார்வை ஒன்றின் கீழ் பாதையை நியம தரத்தில் மீண்டும் தயாரிக்க அல்லது நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | துங்கம பாடசாலை பிரவேச பாதையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக தொழல் நுட்ப அலுவலரிடம் விசாரித்ததுடன் பாதையில் கற்கள் கலன்றுள்ள மேற்பரப்பை தார் இட்டு மீண்டும் தயார் செய்ய குறித்த ஒப்பந்தக் காரருக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுத்தேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 11 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 100,266,600 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தன. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்குவதற்கும் அவ் ஒதுக்கீடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 19 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 4,664,080 ஆன மொத்த ஒதுக்கீட்டின் 51 சதவீதம் முதல் 94 சதவீதம் வரை வீச்சலவான மீதி காணப்பட்டது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்குவதற்கும் அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் இதற்காக குழு நிறுவப்பட கவனம் செலுத்துகிறேன். |